ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

නූතන ලෝක ඉතිහාසය II (I කොටස)
நவீன உலக வரலாறு II (பகுதி I)
Modern World History II (Part I)

**25 C T II**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

நவீன உலக வரலாறு - கி.பி **1500** - கி.பி **1989** வரை

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

* இவ்வினாத்தாள் பகுதி **I**, பகுதி **II** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.
* **பகுதி I** இல் **1 - 40** வரையான **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய** விடைகளை எழுதுக.
* **பகுதி I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்.
* **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதி முடித்த பின்னர், **பகுதி I** இற்கான விடைத்தாள்களை **பகுதி II** இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

## பகுதி I

● **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் **பொருந்தாத** பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**1.** (1) அட்ரியாற்றிக் (2) ஆட்டிக் (3) அத்லாந்திக்
(4) இந்திய (5) பசுபிக் (......)

**2.** (1) ஹொக்கைடோ (2) ஹொன்ஷு (3) ஹொங்கொங்
(4) ஷிக்கோகு (5) கியூஷு (......)

**3.** (1) ஜெனோவா (2) மிலான் (3) வெனிஸ்
(4) புளோரன்ஸ் (5) விட்டன்பேர்க் (......)

**4.** (1) கியோடா (2) மசசியோ (3) பொட்டிசெலி
(4) மக்கியவெல்லி (5) மைக்கல்ஏஞ்சலோ (......)

**5.** (1) வேர்ஜீனியா (2) கலிபோர்ணியா (3) நியுஹம்ப்ஷையர்
(4) நியுயோர்க் (5) நியுஜெர்ஸி (......)

**6.** (1) சுங் யத் சென் (2) சியாங் கை ஷேக் (3) ஹோ சி மின்
(4) சௌ என் லாய் (5) டென் சியாஓபிங் (......)

**7.** (1) வுட்ரோ வில்சன் (2) விற்றோரியொ ஓர்லன்டோ (3) லொயிட் ஜோர்ஜ்
(4) ஜோர்ஜ் கிளமென்சோ (5) பிராங்கிளின் ரூஸ்வேல்ட் (......)

[பக். 2 ஐப் பார்க்க

**8.** (1) இராஜேந்திர பிரசாத்
(2) ஜவஹர்லால் நேரு
(3) சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்
(4) நீலம் சஞ்சீவ ரெட்டி
(5) இராமஸ்வாமி வெங்கடராமன் (……)

**9.** (1) பிரித்தானிய பொதுநலவாய அமைப்பு
(2) சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)
(3) உலக சுகாதார தாபனம் (WHO)
(4) உணவு விவசாய தாபனம் (FAO)
(5) ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாசார அமைப்பு (UNESCO) (……)

**10.** (1) ஹரியானா (2) ராஜஸ்தான் (3) குஜராத்
(4) அரகன் (5) கேரளா (……)

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**11.** (1) யூபிரடிஸ் - தைகிறிஸ் - ஈராக்
(2) நைல் - எகிப்து
(3) சிந்து - பாகிஸ்தான்
(4) குவாங்கோ - சீனா
(5) கங்கை - பர்மா (……)

**12.** (1) மறுமலர்ச்சி - இத்தாலி
(2) சமய சீர்திருத்தம் - ஜெர்மனி
(3) நாடுகாண் பயணங்கள் - ஐபீரியக் குடாநாடு
(4) விழிப்புணர்வு / ஞானோதயம் - நெதர்லாந்து
(5) சமவுடைமைப் புரட்சி - ரஷ்யா (……)

**13.** (1) கோவா - போர்த்துக்கேயர்
(2) இந்தோனேசியா - ஒல்லாந்தர்
(3) மலாயா - ஸ்பானியர்
(4) வியட்னாம் - பிரான்சியர்
(5) பிலிப்பைன் தீவுகள் - அமெரிக்கர் (……)

**14.** (1) மிங் - கம்போடியா
(2) மஞ்சு - சீனா
(3) டொகுகாவா - ஜப்பான்
(4) நுகுயென் - வியட்னாம்
(5) சக்ரி - சீயம் (……)

**15.** (1) ஈரான் - பாரசீகம்
(2) மியன்மார் - லாவோஸ்
(3) ஈராக் - மெஸப்பத்தோமியா
(4) தாய்வான் - போர்மோஸா
(5) பங்களாதேஷ் - கிழக்கு பாகிஸ்தான் (……)

[பக். 3 ஐப் பார்க்க

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகளின் தொகுதிகள் / திகதிகள் / **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் **தரப்படவில்லை.** **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத்** தெரிவுசெய்து **அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | X | | Y |
|---|---|---|---|
| **16.** (i) | நிக்கலே மக்கிய வெல்லி | A | "எல்லா நாடுகளினதும் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்." |
| (ii) | ஜீன் ஜக் ரூசோ | B | "இளவரசன் நரியையும் சிங்கத்தையும்போல் பாவனை செய்ய வேண்டும்." |
| (iii) | கார்ள் மார்க்ஸ் | C | "நூறு மலர்கள் மலரட்டும் நூறு சிந்தனை மலரட்டும்." |
| (iv) | வின்ஸ்ரன் சேர்ச்சில் | D | "மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான் ஆனால் எல்லா இடங்களிலும் சங்கிலியால் கட்டப்பட்டுள்ளான்." |
| (v) | மா ஓ சே துங் | E | "பால்டிக்கில் இருந்து அட்ரியற்றிக் வரை கண்டத்தினூடாக இரும்புத்திரை ஒன்று விழுந்துள்ளது." |

(1) ABCDE (2) BADEC (3) BDAEC (4) ECDBA (5) EDACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **17.** (i) | புரட்சியின் குழந்தை | A | புளோரன்ஸ் நைற்றிங்கேல் |
| (ii) | விளக்கேந்திய பெருமாட்டி | B | விக்டோரியா மகாராணி |
| (iii) | இந்தியாவின் சக்கரவர்த்தினி | C | மார்கிரட் தச்சர் |
| (iv) | பாகிஸ்தானின் தந்தை | D | நெப்போலியன் போனபார்ட் |
| (v) | இரும்பு சீமாட்டி | E | முகம்மது அலி ஜின்னா |

(1) DABEC (2) DACBE (3) DEACB (4) ECDAB (5) EDBCA (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **18.** (i) | உறங்கும் இராட்சதன் | A | இத்தாலி |
| (ii) | கடைக்காரர்களின் தேசம் | B | சீனா |
| (iii) | வெறும் புவியியல் வெளிப்படுத்தல் | C | பிரித்தானியா |
| (iv) | கிரீடத்தின் வைரம் | D | துருக்கி |
| (v) | ஐரோப்பாவின் நோயாளி | E | இந்தியா |

(1) ACEBD (2) BCAED (3) BEACD (4) BEDCA (5) DEACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **19.** (i) | பர்மா | A | மகாரியோஸ் |
| (ii) | மலேசியா | B | சுகர்ணோ |
| (iii) | சைப்பிரஸ் | C | கென்னத் கௌண்டா |
| (iv) | இந்தோனேஷியா | D | துங்கு அப்துல் ரஹ்மான் |
| (v) | சாம்பியா | E | யு நூ |

(1) CEABD (2) DAEBC (3) DEBAC (4) ECADB (5) EDABC (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **20.** (i) | சர்வதேச சங்கம் | A | ஹேக் |
| (ii) | ஐக்கிய நாடுகள் தாபனம் (UNO) | B | வாஷிங்டன் |
| (iii) | சர்வதேச நீதிமன்றம் (ICJ) | C | நியூயோர்க் |
| (iv) | சர்வதேச நாணய நிதியம் (IMF) | D | உரோம் |
| (v) | உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் (WFP) | E | ஜெனீவா |

(1) ACBED (2) BDAEC (3) CADBE (4) ECABD (5) EDABC (……)

[பக். 4 ஐப் பார்க்க

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் **பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரேயுள்ள **அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**21. கீழைத் தேசத்தில் ஒல்லாந்தரின் குடியேற்றப் பேரரசு**

(1) 16 ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே ஒல்லாந்தர் கிழக்கிந்திய தீவுகளுக்கு வந்தனர்.
(2) ஒல்லாந்தரின் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி 1602 இல் தாபிக்கப்பட்டது.
(3) கிழக்கில் ஒல்லாந்தப் பேரரசின் தலைமையகம் கோவாவில் தாபிக்கப்பட்டது.
(4) கிழக்கில் ஒல்லாந்தக் குடியேற்றப் பேரரசை கட்டியெழுப்பிய முக்கிய சிற்பியாக ஜான் பீற்றர்சோகுன் கூன் கருதப்படுகின்றார்.
(5) ஒல்லந்தர் ஆங்கிலேயரைக் கிழக்கிந்திய தீவுகளிலிருந்து விரட்டியடித்தனர். (……)

**22. இங்கிலாந்தில் மகோன்னதப் புரட்சி**

(1) இரண்டாம் ஜேம்ஸ் சிம்மாசனத்திலிருந்து அகற்றப்பட்டார்.
(2) மேரியும் மூன்றாம் வில்லியமும் இங்கிலாந்தின் இணைந்த ஆட்சியாளர் ஆகினர்.
(3) மகோன்னத புரட்சி இங்கிலாந்தில் யாப்பு முறையிலான முடியாட்சிக்கு அத்திவாரம் இட்டது.
(4) ஒலிவர் குறோம்வெல் பிரதமமந்திரியாக நியமிக்கப்பட்டார்.
(5) உரிமைச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. (……)

**23. கைத்தொழில் புரட்சி**

(1) பிரித்தானியாவில் ஆரம்பமானது.
(2) கைத்தொழில் புரட்சி விவசாயப் பொருளாதாரத்தை இயந்திர உற்பத்திகளால் ஆதிக்கம் செலுத்தப்படும் நகர்ப்புற பொருளாதாரமாக மாற்றியது.
(3) கைத்தொழில் மயமாகுதல் முதலில் புடவைக் கைத்தொழிலில் ஏற்பட்டது.
(4) கைத்தொழில் புரட்சி பிரித்தானியாவிலிருந்து ஐரோப்பாக் கண்டத்திற்குப் பரவியது.
(5) பிரித்தானியாவின் பின்னர் கைத்தொழில் மயமான முதலாவது ஐரோப்பிய நாடு போர்த்துக்கல் ஆகும் (……)

**24. இந்தியாவின் தேசிய இயக்கம்**

(1) 1857 இல் பிரித்தானியாவுக்கு எதிராக மக்கள் எழுச்சியடைதல்
(2) இந்தியாவின் நிர்வாக அதிகாரம் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்திடமிருந்து முடியிடம் ஒப்படைக்கப்படுதல்
(3) இந்திய தேசிய காங்கிரஸ் தாபிக்கப்படுதல்
(4) ஒத்துழையாமையும் (Boy cott), சுதேசி இயக்கமும்
(5) 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் (……)

**25. சீனாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் எழுச்சி**

(1) சீனாவில் கம்யூனிசவாதம் மீதான ஆர்வம் 1917 ஆம் ஆண்டின் ரஷ்யப் புரட்சியினால் ஊக்குவிக்கப்பட்டது.
(2) சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி 1921 இல் தாபிக்கப்பட்டது.
(3) சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சிக்கு போர்ப்பிரபுக்கள் ஆதரவு வழங்கினர்.
(4) கம்யூனிஸ்ட்டுகளின் புகழ் பெற்ற 6000 மைல் நீண்ட பயணம் 1934 இல் ஆரம்பிக்கப்பட்டது.
(5) சீன கம்யூனிஸ்ட்டுகள் 1949 இல் வெற்றியடைந்தனர். (……)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் …………………………………. **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் …………………………………. **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் …………………………………. **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் …………………………………. **4** எனவும்
**வேறு** விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ……..... **5** எனவும்
**அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

[பக். 5 ஐப் பார்க்க

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** கீழைத்தேய ஸ்பானிய குடியேற்றப் பேரரசு தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) கீழைத்தேய ஸ்பானிய குடியேற்றப் பேரரசு பிலிப்பைன் தீவுகளை மையமாகக் கொண்டிருந்தது.

(B) ஸ்பானியப் பேரரசின் தலைமை அலுவலகம் பட்டேவியாவில் அமைந்திருந்தது.

(C) ஸ்பானியர் குடியேற்றவாசிகளிடையே கத்தோலிக்க மதத்தைப் பிரசாரம் செய்வதற்கு விசேட ஆர்வம் காட்டினர்.

(D) ஒல்லாந்தரினால் ஸ்பானியர்கள் பிலிப்பைன் தீவுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். (……)

**27.** சிங்கப்பூர் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) 19 ஆம் நூற்றாண்டிலிருந்து சிங்கப்பூர் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் இருந்தது.

(B) சிங்கப்பூர் 1959 இல் சுதந்திரம் பெற்றது.

(C) சிங்கப்பூர் லீ குவான் யூ இனால் ஆட்சி செய்யப்பட்டது.

(D) லீ குவான் யூ இன் பின்னர் மகதிர் பின் முகம்மட் நிர்வாகப் பொறுப்பேற்றார் (……)

**28.** தென்கிழக்கு ஆசியாவில் பிரான்சின் குடியேற்ற பேரரசு தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) இந்தோ - சீனாவை பிரான்ஸ் 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் கைப்பற்றியது.

(B) இரண்டாம் உலகப் போரின்போது இந்தோ - சீனா ஜப்பானால் கைப்பற்றப்பட்டது.

(C) வியட்னாமிய படைகள் பிரான்சுக்கு எதிராகப் போரிட்டன.

(D) 1954 இல் ஜெனிவா மாநாட்டில் இந்தோ - சீனாவில் பிரான்சின் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. (……)

**29.** போல்ஷ்விக் பரட்சி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) பூர்போன் முடியாட்சி தோற்கடிக்கப்பட்டது.

(B) அமைதி, நிலம், பாண் என்பனவே புரட்சியின் முக்கிய வாசகங்கள் ஆகும்.

(C) லெனின் தலைமையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தாபிக்கப்பட்டது.

(D) செஞ்சட்டை இராணுவம் ஸ்டாலின் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. (……)

**30.** ஐக்கிய நாடுகள் சபை தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) ஐக்கிய நாடுகள் சபை 1945 இல் தாபிக்கப்பட்டது.

(B) இதன் பிரதான நோக்கம் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதாகும்.

(C) ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டு முக்கிய அமைப்புகள் பொதுச் சபையும் பாதுகாப்புச் சபையும் ஆகும்.

(D) டக் ஹமர்ஷீல்ட் முதலாவது பொதுச் செயலாளராகப் பணியாற்றினார். (……)

- **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**31.** பிரபஞ்சம் பற்றிய சூரிய மைய கொள்கையை முன்வைத்தவர் யார்?

(1) மைக்கல் சர்வேட்டஸ் (2) நிக்கலஸ் கொப்பர்ணிகஸ் (3) ஜொகனஸ் கெப்லர்
(4) கலிலியோ கலிலி (5) ஐசக் நியூட்டன் (……)

[பக். 6 ஐப் பார்க்க

**32.** "பெருமளவிலான எண்ணிக்கையின் பெருமளவு மகிழ்ச்சி" என்ற கூற்றுடன் தொடர்புபட்ட கோட்பாடு / கருத்து யாது?
(1) முதவாளித்துவம் (2) தாராளவாதம் (3) தலையிடாக் கொள்கை வாதம்
(4) பயன்பாட்டு வாதம் (5) சமூகவுடமைவாதம் (......)

**33.** இந்தியாவில் ஆரியசமாஜம் என்ற அமைப்பினைத் தாபித்தவர் யார்?
(1) ராம் மோகன் ராய் (2) தயாநந்த சரஸ்வதி (3) பால கங்காதர திலக்
(4) சுவாமி விவேகானந்தர் (5) லாலா லஜ்பத் ராய் (......)

**34.** 1870 தொடங்கி 1962 வரை அல்ஜீரியாவை ஆட்சி செய்த ஐரோப்பிய நாடு எது?
(1) பிரான்ஸ் (2) இங்கிலாந்து (3) இத்தாலி
(4) பெல்ஜியம் (5) ஜேர்மனி (......)

**35.** கானாவின் முதலாவது பிரதம மந்திரி யார்?
(1) பட்ரிஸ் லுமும்பா (2) ஜூலியன் நியரேரே (3) மில்ரன் ஒபோடே
(4) ஜோமோ கென்யாடா (5) குவாமே நிக்குருமா (......)

● **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | பிரான்சின் கிழக்கிந்திய வர்த்தக சங்கம் 1600 இல் தாபிக்கப்பட்டது. | அபின் யுத்தத்தின் இறுதியில் பிரான்சுக்கும் சீனர்களுக்கும் இடையில் நாங்கிங் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. | (.........) |
| **37.** | முதலாம் ஆங்கிலேய பர்மா யுத்தத்தின் இறுதியில் கைச்சாத்திடப்பட்ட 'யன்போ உடன்படிக்கையினால்' அரகன், டெனசரீ என்பன பிரித்தானியர் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. | இரண்டாம் ஆங்கிலேய பர்மா யுத்தத்தின் இறுதியில் பர்மா தேசம் முழுவதும் பிரித்தானியர் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. | (.........) |
| **38.** | பஸ்ரீலைத் தாக்குதல் ரஷ்யப் புரட்சியின் ஆரம்பத்தினை குறிப்பிடுகின்றது. | V.I. லெனின் 1921 இல் புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தினான். | (.........) |
| **39.** | முதலாம் உலகப்போர் முடிவடைந்த பின்னர் ஜெர்மனியில் நடைமுறைப்படுத்தப்பட்ட வைமார் யாப்பின் அடிப்படை அம்சம் ஜனநாயகம் தொடர்பிலான அவதானிப்பு ஆகும். | தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் சபை இரண்டையும் ஜனாதிபதியையும் கொண்ட சட்டவாக்க சபையை முக்கியமாக அமைந்த குடியரசை பிரகடனப்படுத்திய வைமர் அரசியல் முறை சர்வஜன வாக்குரிமை முறையையும் அமைச்சரவை அரசியல் முறையையும் ஏற்படுத்தியிருந்தது. | (.........) |
| **40.** | 1921 இல் கம்யூனிஸ்ட் இராணுவத்தால் தோற்கடிக்கப்பட்ட பின்னர் குவாமிங் டோன் படையணி தாய்வான் தீவுக்கு தப்பிச் சென்று அங்கு சீனக் குடியரசு என்ற பெயரில் அரசொன்றை தாபித்தது. | ஆரம்பத்தில் தாய்வான் ஐக்கிய நாடுகள் சபையில் சீனாவின் பிரதிநிதியாக அமர்ந்திருந்த போதும் 1971 இன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதித்துவத்தை அது இழந்துவிட்டது. | (.........) |

* *

[பக். 7 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022 (2023)

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. } 1

නූතන ලෝක ඉතිහාසය II
நவீன உலக வரலாறு II
Modern World History II

25C T

විභාග අංකය / சுட்டெண் / Index No. } ..............................



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

නූතන ලෝක ඉතිහාසය II (II කොටස)
நவீன உலக வரலாறு II (பகுதி II)
Modern World History II (Part II)

**25 C** **T** **II**

**நவீன உலக வரலாறு - கி.பி 1500 கி.பி 1989 வரை**

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ **நான்கு** வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
- ✳ **பகுதி II** ஆனது **A, B, C** ஆகிய **மூன்று** பகுதிகளைக் கொண்டது.
- ✳ **பகுதி A** இன் வினா கட்டாயமானது.
- ✳ **பகுதி B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினாவையேனும் தெரிவுசெய்து, **மேலும் மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **உலகப் புறவுருவப்படம் பகுதி I** உடன் வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | |
|---|---|---|
| (i) பிரனீஸ் | (ii) நைல் நதி | (iii) ஜிபிரோல்டர் நீரிணை |
| (iv) கஸ்பியன் கடல் | (v) மிஸிஸிப்பி நதி | (vi) ஜாவா |
| (vii) பிரேசில் | (viii) சென் பீற்றர்ஸ்பேர்க் | (ix) நியுயோர்க் |
| (x) கராச்சி | (xi) உக்ரைன் | (xii) பனாமா கால்வாய் |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு **01** புள்ளி வீதம்)

## பகுதி B

**2.** "தேசிய அரசுகள் என்பவை பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் தோன்றிய தனித்துவமான அரசியல் அமைப்பாகும்."

(i) தேசிய அரசு என்பதால் கருதப்படுவது யாது என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (03 புள்ளிகள்)

(ii) தேசிய அரசு ஒன்றின் முக்கிய அம்சங்கள் யாவை? (04 புள்ளிகள்)

(iii) ஸ்பானியாவில் **அல்லது** இங்கிலாந்தில் தேசிய அரசு வளர்ச்சியடைந்த முறையினை எடுத்துக் காட்டுக. (09 புள்ளிகள்)

**3.** (i) அமெரிக்கப் புரட்சி ஏற்படக் காரணமான விடயங்களைப் பகுப்பாய்வு செய்க. (10 புள்ளிகள்)

(ii) அமெரிக்கப் புரட்சியினால் எழுந்த விளைவுகளை சுருக்கமாகக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

**4.** பிஸ்மார்க்கின் வகிபாகத்தை மதிப்பீடு செய்து ஜெர்மனியை ஐக்கியப்படுத்தும் முக்கிய கட்டங்களை எடுத்துக் காட்டுக. (16 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) போர்த்துக்கேயரின் குடியேற்றப் பேரரசு

(ii) பிரான்சியப் புரட்சியின் பகுத்தறிவுப் பின்னணி

(iii) 1848 புரட்சிகள்

(iv) போல்ஷ்விக் புரட்சியின் பின்னணி

($08 \times 2 = 16$ புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

## பகுதி C

6. மேஜி சீர்திருத்தத்தின் பின்னர் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை ஜப்பானில் ஏற்பட்ட நவீனமயமாதல் செயன்முறையினைப் பின்வரும் துறைகளின் கீழ் பரிசீலிக்குக.
   (i) சமூகமும், பொருளாதாரமும்
   (ii) அரசியலும், அரசியல் யாப்பும்

(16 புள்ளிகள்)

7. "போர் இடைக்காலப் பகுதியில் சர்வாதிகார ஆட்சியின் எழுச்சியே இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதைத் தடுக்க முடியாத நிலைமைக்கு உள்ளாக்கியது."
   (i) முதலாம் உலகப்போர் முடிவடைந்த பின்னர் ஜெர்மனியுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை எது? (01 புள்ளி)
   (ii) இத்தாலியின் பாஸிசவாதத் தலைவர், ஜெர்மனியின் நாஸித் தலைவர் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (iii) இத்தாலியிலும் ஜெர்மனியிலும் பாஸிச ஆட்சியும் நாஸிச ஆட்சியும் எழுச்சி பெற்றமை இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதற்கு எவ்வளவுக்குக் காரணமாக இருந்தன? (13 புள்ளிகள்)

8. (i) பனிப்போர் என்பதால் கருதப்படுவது யாது என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (04 புள்ளிகள்)
   (ii) பனிப்போர் எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதையும் கியூபா ஏவுகணை நெருக்கடி வரையிலும் அது உலக அரசியலில் எவ்வாறு தாக்கம் செலுத்தியது என்பதையும் பரிசீலிக்குக. (12 புள்ளிகள்)

9. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
   (i) ஜோசப் ஸ்டாலின்
   (ii) மகாத்மா காந்தி
   (iii) மாஓ சேதுங்
   (iv) அச்மட் சுகர்ணோ

($08 \times 2 = 16$ புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI




2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු 1,200.00
or 3 X රු 400.00 with KOKO




2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු 500.00
or 3 X රු 166.67 with KOKO




2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු 1,100.00
or 3 X රු 366.67 with KOKO




2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු 600.00
or 3 X රු 200.00 with KOKO




2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු 750.00
or 3 X රු 250.00 with KOKO




2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු 1,050.00
or 3 X රු 350.00 with KOKO


**LOL STORE PVT LTD** Copyright ©2023